# மார்த்தாண்டம் கல்லூரியில் மாணவர் பேரவை பதவியேற்பு

**மார்த்தாண்டம், பிப். 3–** மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் மாணவர் பேரவை பதவி ஏற்பு விழா முதல்வர் தலைமையில் நடந்தது.

டாக்டர் லதா இறை வேண்டல் செய்தார். முதல்வர் டாக்டர் பால்ராஜ் தலைமை வகித்தார். மாணவர் பேரவை பொருளாளர் டாக்டர் ஐசக் சோபனராஜ் உறுப்பினர்களை அறிமுகம் செய்தார்.

தாளாளர் டாக்டர் வினோத்குமார், மாணவர் பேரவை ஆலோசகர் டாக்டர் சாந்தி, பிரின்ஸ் கஜேந்திர பாபு ஆகியோர் பேசினர். மாணவர் பேரவை தலைவராக இந்திரஜித், துணைத் தலைவராக ஜினாராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாணவர்களின் பல்சுவை நிகழ்ச்சி நடந்தது.